**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**OS.No. 488/2021**

**DW1: திருமதி.விஜயா (எ) யமுனா, க/பெ. தேவராஜ்**
**19.01.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறாா்

முதல் விசாரணை

நான் சென்னை கிழக்கு முகப்பேரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் பிரதிவாதி. நான் பிரதிவாதி தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 15.04.2013 தேதியிட்ட எங்களது விவாக சுபமுகூர்த்த பத்திரிக்கை பி.வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) பி.வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எனது குழந்தை வேதாவின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) பி.வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எனது இருப்பிட சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட எனது விதவை சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. தேவராஜின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்புச்சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. தேவராஜின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வாரிசுரிமைச்சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 21.11.2020 தேதியிட்ட ஜே.ஜே.நகர் காவல் நிலைய குற்ற எண். 1277/2020 ன் முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் பி.வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 27.02.2021 தேதியிட்ட நான் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய புகாரின் நகல் பி.வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. வேதாவின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் பி.வா.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. எனது மருத்துவ சான்றிதழ்கள் (வரிசை 12) பி.வா.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 13.04.2022 தேதியிட்ட நான் கொன்னூர் சார்பதிவாளருக்கு அனுப்பிய கடித நகல் பி.வா.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**தாவா தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.